**கவனிக்க.**- 2009.01.16 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1586 - 2009 ජනවාරි 23 වැනි සිකුරාදා - 2009.01.23

1586 ஆம் இலக்கம் - 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 106 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | – |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 108 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வராராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பததிர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2009 சனவரி மாதம் 30 ஆந் திகதி பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, சனவரி மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் படி கம்பனி கலைப்பு அறிவித்தல்

கம்பனியின் பதிவு இல. - N (PVS) 24958

| | |
|---|---|
| கம்பனியின் பெயர் | : ஹிமாலி டிரேட் சென்டர் (பிறைவட்) லிமிட்டெட் |
| பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி | : இல. 29C, களுத்துறை றோட், அகலவத்தை |
| நீதிமன்றம் | : வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்) |
| வழக்கு இல. | : 38/2007/CO |
| நீதிமன்ற கட்டளைத் திகதி | : 07.03.2008 |
| கோரிக்கை தாக்கல் செய்த திகதி | : 10.12.2007 |
| இணை பெறுநரினதும் கலைப்பாளரினதும் பெயர் | : பி. ஈ. ஏ. ஜயவிக்ரம அன்ட் ஜீ. ஜே. டேவிட் |
| முகவரி | : மே/பா. எஸ்ஜேஎம்எஸ் எசோசியேட்ஸ், ரிஸ்ட்ரக்சர் அன்ட் கோப்பரேட் ரிகவரி, 4 ஆம் தளம், இல. 2, காசல் லேன், கொழும்பு 4 |

1-552/1

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்ட சரத்து 346(1) இன் கீழான ஹிமாலி டிரேட் சென்டர் (பிரை) லிமிடெட் எனும் கம்பனியின் இணைபெறுநரினதும் கலைப்பாளரினதும் நியமனம் பற்றிய அறிவித்தல்

கம்பனியின் பதிவு இல. - N (PVS) 24958

| | |
|---|---|
| கம்பனியின் பெயர் | : ஹிமாலி டிரேட் சென்டர் (பிறைவட்) லிமிட்டெட் |
| பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி | : இல. 29C, களுத்துறை றோட், அகலவத்தை |
| நீதிமன்றம் | : வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்) |
| வழக்கு இல. | : 38/2007/CO |
| இணை பெறுநரினதும் கலைப்பாளரினதும் பெயர் | : பி. ஈ. ஏ. ஜயவிக்ரம அன்ட் ஜீ. ஜே. டேவிட் |
| முகவரி | : மே/பா. எஸ்ஜேஎம்எஸ் எசோசியேட்ஸ், ரிஸ்ட்ரக்சர் அன்ட் கோப்பரேட் ரிகவரி, 4 ஆம் தளம், இல. 2, காசல் லேன், கொழும்பு 4 |
| நியமன திகதி | : 07.03.2008 |

1-552/ 2

## அட்டோர்ணி தத்துவத்தை இல்லாதொழித்தல்/ இரத்துச்செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் ஜா-எல மா-எலிய 990B இலக்கத்தைச் சேர்ந்த ஜயவர்தன ஜயசூரிய எல்சன் க்ளெரன்ஸ் ரஞ்சித் பெர்னாண்டோ ஆகிய நான் 2003, நவெம்பர் 27 ஆந் திகதிய 1267 ஆம் இலக்கம் கொண்டதும் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு விஜித்த குமாரகே என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான அட்டோர்ணி தத்துவத்தின் கீழ் மேற்படி இலங்கை குடியரசில் ஜா-எல மாஎலிய 990B இலக்கத்தைச் சேர்ந்த ஜயவர்தன ஜயசூரிய ஜோசப் பெர்னாண்டோ என்பவருக்கு என்னால் வழங்கப்பட்ட அட்டோர்ணி தத்துவம் இத்தால் இல்லாதொழிக்கவும் இரத்துச்செய்யவும் படுகின்றது என இலங்கை அரசாங்கத்துக்கும் பொதுமக்களுக்கும் சம்பந்தப்பட்ட மற்ற அனைவருக்கும் இத்தால் அறிவித்துக்கொள்கிறேன். இத்திகதியிலிருந்து எனது சார்பில் மேற்படி அட்டோர்ணி தத்துவக்காரரால் செய்யப்படக்கூடிய அல்லது செய்யப்படும் எவையேனும் வருங்காலச் செயல்களுக்கு அல்லது கொடுக்கல் வாங்கல்களுக்கு நான் பொறுப்பாளியாக மாட்டேன்.

ஜயவர்தன ஜயசூரிய எல்சன் க்ளெரன்ஸ்
ரஞ்சித் பெர்னான்டோ.

1-553

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச்செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கொழும்பு 10, ஸ்டபர்ட் பிளேஸ், அவுரேலியா கார்ன்ஸ், இல. 12 ஐச் சேர்ந்த தற்போது கனடா, ஒன்டாரியோ, லண்டன், Wimdermere வீதி, இல. 2-683 இல் வசிக்கும் குணவர்தன முதலிகே சந்தியா (உரிமையாளரின் கனடா பாஸ்போர்ட் இல. JG540914) வுக்கு வழங்கப்பட்ட கொழும்பு பகிரங்க நொத்தாரிசு D. W. பதினாயக்கவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1990, சனவரி 17 ஆந் திகதிய இல. 3514 எனும், சொல்லப்பட்ட இலங்கை குடியரசு வெல்லம்பிட்டி, அவிசாவளை வீதி, இல. 157 ஐச்சேர்ந்த குணவர்தன முதலிகே நிஹால் சரத் இற்கு வழங்கப்பட்ட அட்டோர்ணி தத்துவத்தை இங்கு குறிப்பிடப்படும் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வருமாறு இரத்துச் செய்கிறேன். இதன் பிறகு சொல்லப்பட்ட அட்டோர்ணி மூலம் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக நான் பொறுப்பாக மாட்டேன்.

குணவர்தன முதலிகே சந்தியா.

1-575

## கம்பனி பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச்சட்டத்தின் 9 (2) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் பொறுப்பு வரையறுத்த கம்பனி தனது பெயரை 16.12.2008 முதல் மாற்றிக்கொண்டுள்ளது என இத்தால் அறிவிக்கப் படுகிறது :-

| | |
|---|---|
| கம்பனியின் முன்னைய பெயர் | : மயின்ஸ் எவ்சீபி (பிரைவேட்) லிமிட்டெட் |

| | |
|---|---|
| கம்பனி இல. | : பீவீ 5505 |
| கம்பனியின் பதிவு அலுவலக முகவரி | : 32/1- 32/2, காசல் ஸ்ரீட், கொழும்பு 8 |
| கம்பனியின் புதிய பெயர் | : மயின்ஸ் அட்வடிசீங் (பிரைவேட்) லிமிட்டெட் |

எஸ்ஜே கோர்ப்பரேட் சேர்விசஸ்
(பிரைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

லெவல் 04, இல. 2 காசல் லேன்,
கொழும்பு - 4,
07.01.2009.

1-582

---

## தனியார் கம்பனி பதிவு செய்தல் தொடர்பான அறிவித்தல்

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்

| | |
|---|---|
| கம்பனியின் பெயர் | : ரங்கி பெஷன் பிரைவேட் லிமிட்டெட் |
| பதிவு செய்யப்பட்ட திகதி | : 2008.10.17 |
| பதிவு செய்யப்பட்ட இலக்கம் | : பீவீ 65904 |
| பதிவு அலுவலகம் | : இல. 427, கண்டி வீதி, பல்லபான, யட்டோகொட |

பணிப்பாளர் சபையின் கட்டளைப் பிரகாரம்,

2008.11.02

1-585

---

## அட்டோர்ணி உரிமையை இரத்துச்செய்தல்

முரலனி முரலனி ரத்வத்தை இல. 9/2, சேக்குளார் றோட், தெற்கு குருநாகல் போஸ்ட் என்பவரை திருமணம் செய்தபின், ஆனன்த பண்டார பக்மிவது, இல. 9, சேக்குளர் றோட் தெற்கு அளித்த பவர் ஒப் அட்டோர்ணி இல. 2640/06.03.1998 திரு வசந்தா தம்மிகா காமராச்சி பிரசித்த நொத்தாரிசுவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட உரிமையை அதிகாரத்தை ரத்துச் செய்துள்ளேன் என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அதன் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

மேற்குறிப்பிட்ட ஆனன்த பண்டார பக்ம்வது அவர்கள் அதன்பின் அதன் சார்பில் செய்து கொள்ளும் எந்த ஒரு வாங்கல் கொடுக்கல் ஆகிய இரு நடவடிக்கைக்கும் நான் பொறுப்பாளியல்ல

முரலனிபக்மிவது/மாலனி ரத்வத்தை.

01-604

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கமைய கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது :-

| | |
|---|---|
| கம்பனியின் பெயர் | : ட்ரான்ஸ் சிஸ்டம்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் |
| பதிவு இல. | : பீவீ 62948 |
| பதிவு விலாசம் | : இல. 149/5, 1வது மாடி, ஹெவ்லொக் வீதி, கொழும்பு - 05 |

யு. எச். எம். குணசேக்கர,
பணிப்பாளர்.

1-647

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கமைய கம்பனி உருவாக்கம் சம்பந்தமான பொது அறிவித்தல்

மேற்குறிப்பிட்ட கம்பனிச் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கீழ் குறிப்பிட்ட கம்பனியின் பதிவாகல் சம்பந்தமான தகவல்கள் பொதுமக்களின் கவனத்திற்காக இத்தால் தெரியப்படுத்தப்படுகிறது:-

| | |
|---|---|
| கம்பனியின் பெயர் | : ஹஸ்ஸாஸ் பெர்னிச்சர் (பிரைவேட்) லிமிட்டெட் |
| கம்பனியின் பதிவு இல. | : பீவீ 66026 |
| பதிவு செய்த திகதி | : 30.10.2008 |
| கம்பனியின் விலாசம் | : இல. 29/10, 4வது லேன், அநுராதபுர வீதி, புத்தளம். |

ஏ. எம். ஜவ்வாமில்,
செயலாளர்.

தொலைபேசி : 0777-259884

1-648

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கமைய கம்பனி உருவாக்கம் சம்பந்தமான பொது அறிவித்தல்

மேற்குறிப்பிட்ட கம்பனிச் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கீழ்க்குறிப்பிட்ட கம்பனியின் பதிவாகல் சம்பந்தமான தகவல்கள் பொதுமக்களின் கவனத்திற்காக இத்தால் தெரியப்படுத்தப்படுகிறது:-

| | |
|---|---|
| கம்பனியின் பெயர் | : ஸபாரி ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் |
| பதிவு இல. | : பீவீ 66363 |
| பதிவு செய்த திகதி | : 28.11.2008 |
| கம்பனியின் விலாசம் | : இல. 90, அநுராதபுர வீதி, புத்தளம் |

ஏ. எம். ஜவ்வாமில்,
செயலாளர்.

தொலைபேசி : 0777259884

1-649

# ஏல விற்பனைகள்

## றுஹுன அபிவிருத்தி வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆவது அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்*

**சொத்துக்கள் ஏலவிற்பனை**

றுஹுன அபிவிருத்தி வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி இங்கு கீழ்க் குறிப்பிட்ட சொத்துக்கள் 2009, பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதி மு. ப. 10.30 க்கு அச்சொத்துக்கள் அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

**ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விபரம்** :- தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்திலே வெல்லபட பத்துவையில் பதீகமயில் அமைந்துள்ள கொஹுவலவத்த என்ற காணியின் அதிகாரம் பெற்ற நிலஅளவையாளரான திரு. பீ. ஜீ. கருணாதாச அவர்களினால் அளந்து ஒழுங்கு செய்யப்பட்ட 1983.03.02 ஆந் திகதியின் இலக்கம் 243 எனும் வரைபடத்திற் காட்டிய ஒரு றூட் முன்று தசம் ஒரு பேர்ச்சஸ்ஸும் (0ஏ.1றூ.3.1பே.) கொண்ட மிகப்பெரிய இலக்கம் 01 எனும் துண்டின் அனைத்து நிலம், பயிர்ச்செய்கை, கட்டிடங்கள் உட்படவாகும். இன்னும் மேலே கூறப்பட்ட இலக்கம் 243 எனும் வரைபட இலக்கம் 03 எனும் துண்டும், பாதைக்காக உபயோகிக்கவும், உரிமை உண்டு.

**மேலதிக விபரங்கள்**.- 2003.08.15 அரச வர்த்தமானி பத்திரிகையிலும் 2008.06.13 ஆந் திகதியின் “தினமின”, “த ஐலண்ட்”, “தினகரன்” ஆகிய சஞ்சிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட ஏலவிற்பனை பகுதியை கவனத்திற் கொள்க.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்**.- மாத்தறை - திக்குவெல்லை வீதியில் பதீகமயில் அமைந்துள்ள விலேஜ் ஹோட்டலுக்கு எதிரே அமைந்துள்ள வீதியில் 60 மீற்றர் அளவு தூரம் செல்ல இவ் ஆதனம் தென்படும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை** .- ஏலவிற்பனை தீர்ந்துவிட்டதும் கீழ்க் கண்ட படி பணத்தை கொள்வனவாளரினால் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் 25% மும் ;
(2) உள்ளூர் அதிகாரியின் வரியாக விற்பனை விலையில் 1% மும் ;
(3) ஏலவிற்பனையாளர் தரகு கொள்வனவு விலையில் 2 1/2% ;
(4) இலிகிதர், அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500 வும் ;
(5) விற்பனை செலவும், வேறு கட்டணங்கள் இருப்பின் அவையும்;
(6) விற்பனை உறுதிப் பத்திரத்திற்கான முத்திரை கட்டணமும்.

கொள்வனவு விலையில் மீதி 75% க்கான பணத்தை ஏலவிற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மாத்தறை பம்புரன அனகாரிக தர்மபால மாவத்தையிலுள்ள இல. 382ஏ எனும் நிலையத்திலுள்ள றுஹுன அபிவிருத்தி வங்கியின் தவிசாளர் அவர்களுக்கு செலுத்துக.

உரிமை கோரும் ஒப்பினையையும் வேறு விபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெற்றுக்கொள்க.

தொலைபேசி இல.: 041 - 2231532, 2226208, 2226209

ஜீ. பீ. ஆனந்த (சமாதான நீதவான்)
அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்,
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்

குருந்துவத்த,
வல்கம,
மாத்தறை.
தொலைபேசி இலக்கம் : 041 - 2228731

1-498/1

## றுஹுன அபிவிருத்தி வங்கி - கன்தரை கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆவது அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்*

**சொத்துக்கள் ஏலவிற்பனை**

றுஹுன அபிவிருத்தி வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி இங்கு கீழ்க் குறிப்பிட்ட சொத்துக்கள் 2009, பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதி மு. ப. 10.30 க்கு அச்சொத்துக்கள் அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

**ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விபரம்** :- தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்திலே வெல்லபட பத்துவையில் தெவிநுவர பிரதேச சபை எல்லைக்குள் தெவிநுவரயில் அமைந்துள்ள வருமான வரி இலக்கம் 224 எனும் குருவேயில் வசிக்கும் பதிங்சியசிடியவத்த எனும் காணி, அதிகாரம் பெற்ற நில அளவையாளரான திரு. டப். ஜீ. சுனில் என்பவரினால் அளந்து ஒழுங்கு செய்யப்பட்ட 1998.03.28 ஆந் திகதியின் இலக்கம் 91 எனும் வரைபடத்தின் துண்டு இலக்கம் 01 என காட்டப்பட்ட இருபத்து ஆறு தசம் ஆறு ஒன்பது பேர்ச்சஸ் (0ஏ.0றூ.26.69பே.) மிகப்பெரிய காணியிலும், அதற்கான பயிர்ச்செய்கை, கட்டிடங்கள் போன்ற அனைத்துமாகும்.

**மேலதிக விபரங்களுக்கு**.- 2007.06.08 ஆந் திகதிய அரச வர்த்தமானிப் பத்திரிகையிலும் 2007.12.07 ஆந் திகதிய “தினமின”, “தினகரன்”, “த ஐலண்ட்” ஆகிய சஞ்சிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட ஏலவிற்பனை பகுதியை கவனிக்க.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்**.- தெவிநுவர கடிகார கோபுரத்திற்கு அருகே விழும் லயிட்ஹவுஸ் வீதியில் 300 மீற்றர் அளவு பாதையில் இடப்பக்கமாக இக்காணி அமைந்திருக்கும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை** .- ஏலவிற்பனை தீர்ந்துவிட்டதும் கீழ்க் கண்ட படி பணத்தை வெற்றிபெற்ற கொள்வனவாளரினால் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் 25% ;
(2) உள்ளூர் அதிகாரியின் வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு 1% ;
(3) ஏலவிற்பனையாளர் தரகு என விற்பனை விலையில் 2 1/2% ;
(4) இலிகிதர், அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500 ;
(5) விற்பனை செலவும், இதர செலவுகள் இருப்பின் அவையும் ;

(6) விற்பனை உறுதிப் பத்திரத்திற்கான முத்திரை கட்டணம் ஆகும்.

கொள்வனவு விலையில் மீதி 75% க்கான பணத்தை விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மாத்தறை பம்புரன அனகாரிக தர்மபால மாவத்தையிலுள்ள இல. 382ஏ எனும் நிலையத்திலுள்ள றுஹுன அபிவிருத்தி வங்கியின் பிரதான அலுவலகத்தின் தலைவர் அவர்களுக்கு செலுத்துக.

மேற்படி 30 நாட்களுக்குள் குறிப்பிட்ட பணத்தை செலுத்தத் தவறின் தற்போதைக்கும் கொள்வனவு விலையில் செலுத்திய 25% க்கான பணத்தை திரும்பவும் செலுத்தாதுவிடவும், மீண்டும் அச்சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமையுண்டு.

உரிமை கோரும் ஒப்பினையையும் வேறு விபரங்களுக்கும் மேற்குறிப்பிட்ட முகவரியை தொடர்பு கொள்க.

தொலைபேசி இல.: 041 - 2231532, 2226208, 2226209, 2259585

ஜீ. பீ. ஆனந்த (சமாதான நீதவான்)
அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்,
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்

குருந்துவத்த,
வல்கம,
மாத்தறை.
தொலைபேசி இலக்கம் : 041 - 2228731

1-498/2

---

## றுஹுன அபிவிருத்தி வங்கி - மொரவக கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆவது அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்

### சொத்துக்கள் ஏலவிற்பனை

றுஹுன அபிவிருத்தி வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத் தின்படி இங்கு கீழ்க் குறிப்பிட்ட சொத்துக்கள் 2009, பெப்புருவரி மாதம் 11 ஆந் திகதி மு. ப. 11.30 க்கு அச்சொத்துக்கள் அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

**ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விபரம் :-** தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்திலே மொரவக் கோரளேயில் வெலிகமயில் அமைந்துள்ள பொல்கஸ்விலஹேன என்ற ஐந்து ஏக்கர் ஒரு றூட் இருபத்து நான்கு பேர்ச்சஸ் (05ஏ.01றூ.24பே.) கொண்ட மிகப் பெரிய காணியும் அதிலுள்ள அனைத்து மரங்கள், பயிர்ச்செய்கை, பழவர்க்கங்கள், கட்டிடங்கள் உட்படவாகும்.

மேற்கூறிய சொத்துக்கள் ஜ. கொடம்பகே எனும் அதிகாரம்பெற்ற நில அளவையாளரினால் ஒழுங்கு செய்யப்பட்டு, இலக்கம் 4421 உம் 2002.02.09 ஆந் திகதிக்குரிய வரைபடத்தில் குறிப்பிட்டிருக்கும்.

**மேலதிக விபரங்களுக்கு.-** 2008.10.24 ஆந் திகதிய அரச வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தலிலும் 2008.12.03 ஆந் திகதிய ''தினமின'', ''த ஐலண்ட்'', ''தினகரன்'' எனும் சஞ்சிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட ஏலவிற்பனைப் பகுதியை கவனிக்க.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்.-** மொரவக ஆரம்ப பாடசாலை அருகாமையில் விழும் அதிமில்ல பாதைக்கு 1 1/2 கி. மீற்றர் அளவு தூரம் செல்ல பாதைக்கு எல்லையாக வலப்பக்கமாக இச்சொத்துக்கள் அமைந்திருக்கும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை .-** ஏலவிற்பனை தீர்ந்துவிட்டதும் வெற்றி பெற்ற கொள்வனவாளரினால் கீழ்க் கண்ட படி பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் 25% ;
(2) உள்ளூர் அதிகாரியின் வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு விற்பனை விலையில் 1% ;
(3) ஏலவிற்பனையாளர் தரகு என விற்பனை விலையில் 2 1/2% ;
(4) இலிகிதர், அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500 ;
(5) விற்பனை செலவும், இதர செலவுகள் இருப்பின் அவையும் ;
(6) விற்பனை உறுதிப் பத்திரத்திற்கான முத்திரை கட்டணம்.

கொள்வனவு விலையில் மீதி 75% க்கான பணம் விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மாத்தறை பம்புரன அனகாரிக தர்மபால மாவத்தையில் இல. 382ஏ எனும் நிலையத்திலுள்ள றுஹுன அபிவிருத்தி வங்கியின் பிரதான அலுவலகத்தின் முகாமையாளர் அவர்களுக்கு செலுத்த வேண்டும்.

மேற்படி 30 நாட்களுக்குள் அப் பணத்தை செலுத்தத் தவறின் தற்போதைக்கும் கொள்வனவு விலையில் செலுத்திய மீதி 25% க்கான பணத்தை திரும்பவும் செலுத்தாதுவிடவும், மீண்டும் அச்சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமையுண்டு.

உரிமை கோரும் ஒப்பினையையும் வேறு விபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெற்றுக்கொள்க.

தொலைபேசி இல.: 041 - 2231532, 2226208, 2226209

ஜீ. பீ. ஆனந்த (சமாதான நீதவான்)
அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்,
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்

குருந்துவத்த,
வல்கம,
மாத்தறை.
தொலைபேசி இலக்கம் : 041 - 2228731
071 - 4438516

1-536

**பான் ஏசியா பாங்கிங் கோப்பரேஷன் பீ. எல். சீ**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், சல்பிட்டி கோரளேயிலுள்ள பல்லேபத்துவிலிருக்கும் ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே நகர சபை எல்லைக்குள் இருக்கும், நாவலயில் அமைந்துள்ளதும், தற்போது நாவல வீதியில் இலக்கம் 445 என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்டுள்ளதும், உரிமம்பெற்ற நில அளவையாளர் எம். எல். என். பெரேரா அவர்களால் வரையப்பட்டு, 2006, மே 28 ஆந் திகதியிடப்பட்ட 3551 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 18 எனக் குறிப்பிடப்பட்டு, பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு. (இது, உரிமம்பெற்ற நில அளவையாளர் சிறி டி. லியனசூரிய அவர்களால் வரையப்பட்டு, 1982, ஒற்றோபர் 29 ஆந் திகதியிடப்பட்ட 2639 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 18 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் மீள் அளவை என்பதுடன், குறித்த 2639 ஆம் இலக்க வரைபடத்தில் இருக்கும் துண்டு 18 ஆனது, உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். குமாரசுவாமி அவர்களால் வரையப்பட்டு 24.04.1959 எனத் திகதியிடப்பட்ட 127 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 18 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் மீள் அளவையாகும்) அதிலுள்ள கட்டடங்கள் மற்றும் நிலைத்திருக்கும் அனைத்துடனும்**

**(காணியின் விஸ்தீரணம் : 00ஏ. 00றூ. 20பே.)**

**127 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 20 எனக் குறிப்பிடப்பட்ட பாதை மீதான உரிமையும் உள்ளடங்கலாக.**

**இந்த இடத்திற்குச் செல்வதற்கான வழி.-** நாவல சந்தியிலிருந்து (நாவல வீதியும், நாராஹேன்பிட்ட வீதியும் சந்திக்கும் முக்கியமான சந்தி) இந்த ஆதனத்தைச் சென்றடைய, நாவல வீதி ஊடாக, ராஜகிரியவை நோக்கி சுமார் 1.2 கிலோ மீற்றர் செல்லும்போது, உங்கள் இடதுபுறமாக இந்தக் காணியை பார்க்கலாம்.

*(கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜே. ஆர். தொலவத்தகே அவர்களால் உறுதிப்படுத்தப்பட்டு 2006, திசெம்பர் 28 ஆந் திகதியிடப்பட்ட 2257 மற்றும் 2259 ஆகிய இலக்கங்களைக் கொண்ட, இரு பிணை உறுதிகள் மீதான, வருமதியான கொடுப்பனவு தவணை தவறியதால், வரையறுக்கப்பட்ட ஓட்டோவே என்டர்பிரைசஸ் (தனியார்) நிறுவனத்தினால் பான் ஏஷியா பாங்கிங் கோப்பரேஷன் பீஎல்சி யிற்கு (முன்னர் வரையறுக்கப்பட்ட பான் ஏஷியா வங்கி மற்றும் வரையறுக்கப்பட்ட பான் ஏஷியா பாங்கிங் கோப்பரேஷன் என அழைக்கப்பட்ட ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனம்)*

எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2009 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 12 ஆந் திகதி வியாழக்கிழமை மு. ப. 11.00 மணி தொடக்கம் எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.-** ஏலவிற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய 1% விற்பனை வரி ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% ;
(4) 90,000 ரூபாவுக்கு மேற்படாத வகையில் மொத்த விளம்பரச் செலவில் 50% ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூபா 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூ. 2,000.

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் செலுத்தப்படவேண்டும்.

**இத்தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-** தயவு செய்து 2008 ஆம் ஆண்டு யூலை மாதம் 04 ஆந் திகதி வெளியான சிலோன் டெயிலி நியூஸ், லக்பிம மற்றும் சுடர் ஒளி செய்திப் பத்திரிகைகளையும், 2008 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆந் திகதி வெளியான அரசாங்க வர்த்தமானி அறிவித்தலையும் பார்வையிடவும்.

**மேலதிக விபரங்கள்.-** உறுதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களை, "சிரேஷ்ட முகாமையாளர், சட்டப்பிரிவு, பான் ஏஷியா பாங்கிங் கொப்பரேஷன் பீஎல்சி, இல. 450, காலி வீதி, கொழும்பு 3" எனும் முகவரியில் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இலக்கங்கள் : 2565573, 2565565

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
அரச அங்கீகாரம் பெற்ற ஐஎஸ்ஓ 9001 : 2000
இலக்க தராதரமுடைய ஒரேயொரு பிரபல முன்னோடி
பட்டய ஏலவிற்பனையாளர், பெறுமதி மதிப்பீட்டு
ஆலோசகர் மற்றும் காணி செயல் முகவர்.

| | |
|---|---|
| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும் : |
| இல. 24, டொரிங்டன் வீதி, கண்டி. | இல. 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 05. |
| தொலைபேசி இல. : 081-2227593 | தொலைபேசி இல. : 011-2502680, 2585408 |
| தொ./ ஃபெக்ஸ் : 081-2224371 | தொ./ ஃபெக்ஸ் : 011-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்-அஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.schokmanandsamerawickreme. com

1- 620

---

**இலங்கை வங்கி**

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப் பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

*(களனிய, கிரிபத்கொட, கண்டி றோட், இல. 6ஏ ஐச் சேர்ந்த இந்தியன் பெஷன் (பிரை) லிமிடெட் மற்றும் றாகம, குருகுலாவ,*

*இல. 221வீ என்னும் முகவரியைச் சேர்ந்த திருமதி எஸ். வில்லியம்ஸ் ஆகியோரால் ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.)*

*1. கடன் தொடர்பு இல. 5940799 மற்றும் 5943761*

*இலங்கை வங்கி பணிப்பாளர் சபை இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிஸக் குடியரசின் 2008. 12. 05 ஆந் திகதிய 1579 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியிலும் 2008. 11. 21 ஆந் திகதிய ''தினமின'', ''டெய்லி நியூஸ்'' மற்றும் 2008.11.24 ஆந் திகதிய ''தினகரன்'' ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் கோட்டே, பிற்றகோட்டே, இல. 474 ஐச் சேர்ந்த ஆர். எஸ். எம். ஏலத்தின் ஏலதாரர் திரு. ஆர். எஸ் மஹானாம 2009.02.28 ஆந் திகதி (சனிக்கிழமை) மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

**அட்டவணை**

*மேல் மாகாணம், கம்பஹா மாட்டவம், சியனே கோரளை அதிகாரி பற்றுவில் வத்தளை பிரதேச சபை எல்லைகளுள் (வெலிசர உப அலுவலகம்) மஹர குருகுலாவ கிராமத்தில் அமைந்த குருகுலாவ வீதி வலதில் வரிமதிப்பிலக்கம் 296/30 ஐக் கொண்ட 'பம்புருகஹவத்த' அல்லது 'லிந்தமுலகொட்டுவ' என அழைக்கப்படும் காணியின் உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே. ஏ. ரூபசிங்க தயாரித்த 2000 யூலை 8 ஆந் திகதியிட்ட அளவை வரைபடம் இல. 440/2000 இல் விபரித்த துண்டு V என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : துண்டுகள் T மற்றும் U வும் ; கிழக்கில் : துண்டு R2 (15 அடி அகலப் பாதைக்கு ஒதுக்கப்பட்டது) ; தெற்கில் : முன்னர் V அஜிதா மற்றும் கிரிகோரிஸ் நானாயக்காரவின் தற்சமயம் உப பிரிவாக்கப்பட்டு விற்கப்பட்ட காணியும் ; மேற்கில் : முன்னர் V அஜிதாவினதும் கிரிகோரிஸ் நாணயக்காரவினதும் தற்சமயம் உப பிரிவாக்கப்பட்டு விற்கப்பட்ட காணியும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 440/2000 இன் படி பதினான்கு தசம் ஆறு ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 14.65பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடம் மற்றும் சகலதும் ஆகும். இது கம்பஹா காணிப்பதிவகத்தில் C 618/249 இல் பதிவு செய்யப்பட்டது.*

*அத்துடன் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 440/2000 இல் விபரித்த துண்டுகள் R1, R2, R3 மற்றும் R4 ஆகியவற்றின் மீதான வழி உரிமையும் ஆகும்.*

*பணிப்பாளர் சபை கட்டளைப்படி,*

B. M. *பிரேமரத்ன,*
*சிரேஷ்ட முகாமையாளர்.*

*இலங்கை வங்கி,*
*மேற்றரக் கிளை,*
*கொள்ளுப்பிட்டிய,*
*2009.01.05*

*1 - 678*

**ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ-மஹரகம கிளை**

*(முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி என அறியப்பட்டது)*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

**பெறுமதிமிக்க ஆதனம் ஏல விற்பனை**

*(கடமைப்பட்டவரும் சொத்தை ஹற்றன்நஷனல் வங்கி பீஎல்சிக்கு அடகு வைத்தவருமான ஆஷ்லி மைக்கல் நந்தன பெர்னாண்டோ அவர்கள், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எம். எல். ஏ. டீ குணதிலக்க அவர்களால் 2003. 10. 10 ஆந் திகதியிடப்பட்டு அத்தாட்சிப் படுத்தப்பட்ட முறி இல. 882 இல் கொடுப்பனவு தவறியுள்ளார்.)*

*ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டட் பீஎல்சீயால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், மேலே விபரிக்கப்பட்ட சொத்தை, அதேயிடத்தில் 16.02.2009 மு. ப. 11. 00 இற்கு நான் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வேன்.*

***ஆதனத்தின் விவரணம்.**-உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். ஏ. டீ. பிரேமரட்ன அவர்களால் 2001. 01. 05 ஆந் திகதியிடப்பட்டுத் தயாரிக்கப்பட்ட வரைபட இல. 2973 இல் துண்டு 10 எனக்குறிக்கப்பட்ட, காணியிலிருந்தும் வெளியிலிருந்தும் "தொலேகனத்த" மற்றும் "கொடெல்லவத்த" என அழைக்கப்படும் பிரிக்கப்பட்ட நிர்ணயிக்கப் பட்ட காணித்துண்டானது, கட்டிடங்கள் மற்றும் அதிலுள்ள அனைத்து முடன் பன்னிபிட்டிய, தெப்பானம, வீர மாவத்தை வரிமதிப்பீட்டிலக்கம் 190/22/எல் இல் மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டி கோரளை பள்ளே பற்றுவில் மஹரகம நகரசபை எல்லைக்குள் தெப்பானம கிராமத்தில், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எம். எல். ஏ. டீ. குணதிலக்க அவர்களால் 2003 ஒற்றோபர் 10 ஆந் திகதியிடப்பட்டு அத்தாட்சிப் படுத்தப்பட்ட முறி இல.882 இன் 2ஆவது அட்டவணையில் விரிவாக விவரிக்கப்பட்ட பாதைக்கான உரிமையுடன் அமைந்துள்ளது.*

விஸ்தீரணம் : 7 பேர்ச்

***தீர்மான அறிவித்தலுக்கு.**- தயவு செய்து 2007, நவெம்பர் 02 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2007, நவெம்பர் 16 ஆந் திகதிய ''ஐலண்ட்'', ''திவயின'', ''தினகரன்'' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**கொடுப்பனவு செய்யும் முறை** .- *ஏலத்தின் இறுதியில் சித்திகர மான கொள்வனவாளர்கள், பின்வரும் தொகைகளைப் பணமாகச் செலுத்த வேண்டும் :-*

*(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;*
*(2) உள்ளூராட்சிகளுக்கான வரி 1% (ஒரு வீதம்) ;*
*(3) ஏலதாரர் தரகுப்பணமாக, கொள்வனவு விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;*
*(4) விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணமாக ரூ 2000 ;*
*(5) கிளார்க், கூவுவோர் வேதனமாக ரூபா 500 ;*
*(6) மொத்த விளம்பரச் செலவு*

*விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்வனவு விலையின் எஞ்சிய 90% ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ யில் வைப்பிலிடப்படல் வேண்டும்.*

மேலதிக விபரங்கள், காணி உறுதி, ஏனைய தொடர்புடைய ஆவணங்களை "தலைமையலுவலகம், ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, கடன் மேற்பார்வை மற்றும் மீளப் பெறுகைத் திணைக்களம், பிரதம முகாமையாளர்" இடம் பரீட்சித்துப் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. - 2661815, 2661816

ரஞ்ஜித்த எஸ். மஹாநாம,
சமாதான நீதவான் (அகில இலங்கை),
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர், ஏலதாரர்.

"ஆர். எஸ். எம். ஒக்ஷன்ஸ்",
மஹநாம ட்றைவ்,
474, பிட்டகோட்டே,
கோட்டே
தொலைபேசி இல. 2863121

1 — 653/2

---

### ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ-நிட்டம்புவ கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

**பெறுமதிமிக்க ஆதனம் (மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், ஹப்பிட்டிகம் கோறளை, யட்டிகஹபற்று, கித்துல்வலவில் அமைந்துள்ளதும் "அம்பகஹவத்தையின் ஒரு பாகம்" மற்றும் "கஹட்டகஹவத்தை இன் துண்டுகள் ஏ மற்றும் பி" என அழைக்கப்படும் காணியின் காணித்துண்டு முழுவதும் ஏலவிற்பனை**

**(காணியின் விஸ்தீரணம் : 35.4 பேர்ச்சுகள்)**

*(கம்பஹாவைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எஸ். ஜே. அத்தபத்து அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2004, ஏப்பிறல் 28 ஆந் திகதியிடப்பட்ட முறி இல. 9217, 1999 ஒகத்து 12 ஆந் திகதியிடப்பட்ட முறி இல. 7946 மற்றும் 1999, ஒகத்து 12 ஆந் திகதியிடப்பட்ட முறி இல. 5709 ஆகிய எல்லாவற்றின் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ள கடப்பாடுடையவரான புஞ்சிஹேவா அதிகாரிகே நிமல் சந்திரசிறியினால் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்)*

ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இனால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 18.02.2009 ஆந் திகதி மு. ப. 11. 00 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு**.- 2008, யூலை 18 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2008, ஒகத்து 5 ஆந் திகதிய "ஜலண்ட்", "திவயின", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்** .- வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் தொகைகளை காசாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய உள்ளூர் அதிகார சபை வரி 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) விற்பனையில் உறப்பட்ட மொத்த விளம்பரச் செலவுகள் ;
(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000.

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ ஏலவிற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்த வேண்டும்.

எஞ்சிய தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ஐ தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

உரித்து உறுதிகளையும் வேறேதேனும் குறிப்புக்களையும் "கொழும்பு, 10, ரி. பி. ஜாயா மாவத்தை, இல. 479, 'எச்என்பி கோபுரங்கள்', ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, சிரேஷ்ட முகாமையாளர் -(அறவீடுகள்)" அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. : 011-2661826.

ரஞ்ஜித்த எஸ். மஹாநாம,
(தீவு முழுவதுக்குமான சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், விலை மதிப்பிடுநர்,
மற்றும் உத்தரவு பெற்ற ஏலதாரர்.

"ஆர். எஸ். எம். ஒக்ஷன்ஸ்",
மஹநாம டிரைவ்,
474, பிட்டகோட்டே,
கோட்டே
தொலைபேசி இல. 2863121

1— 653/1

---

### ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ-தலங்கம கிளை

(முன்னர் ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் எனப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

**பெறுமதியான சொத்தின் ஏல விற்பனை**

**அனைத்து மற்றும் தனி, அசையும் இயந்திராதிகள் மற்றும் உபகரணங்கள் பின்வருவன உள்ளடங்கலாக.**

| விபரம் | தயாரிப்பு/மொடல் | தொடர் இல. |
|---|---|---|
| 1. வெட்டும் மெஷின்கள் | ஹெய்டல்பேர்க் | 65512-2 |
| 2. அச்சடிக்கும் ஒப்செட் மெஷின் | ஹெய்டல்பேர்க்/கோர் | 563/373-753 |

**இவற்றின் சகல உதிரிப்பாகங்களுடன் (அனைத்தும் இதன் பின்னர் கூட்டாக கடமைப்பட்டவரின் அசையும் இயந்திராதிகள் மற்றும் உபகரணங்கள் என அழைக்கப்படும்) மேல் மாகாணம், கொழும்பு மாவட்ட, அங்கொடை கொட்டிகாவத்த, அவிசாவளை வீதி, இல. 338/1 இல் காணப்படும் மற்றும் கடமைப்பட்டவர் தற்போதுள்ள சகல வளவுகளிலும் அல்லது எந்தவொரு நேரமும் மற்றும் நேரத்திற்கு நேரம் மேலே குறிப்பிட்ட மாவட்டத்தில் குறித்த அசையும் இயந்திராதிகள் மற்றும் உபகரணம் மற்றும் அதனுடன் சேர்ந்தவை நேரத்திற்கு நேரம் மற்றும் சகல நேரங்களிலும் தொடர்ச்சியாகவுள்ள இவற்றைக் கொண்டு வரமுடியும் அல்லது வைக்க முடியும் மற்றும் அனைத்தும் அல்லது ஏதாவதொரு இடம்**

**அல்லது இடங்களில் கடமைப்பட்டவர் எந்நேரமும் மற்றும் நேரத்திற்கு நேரம் இதன்பின் அகற்றவும் மற்றும் கடமைப்பட்டவரின் அசையும் இயந்திராதிகள் மற்றும் உபகரணத்தைக் கொண்டு வரமுடியும்.**

*(கடமைப்பட்டவரும் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீக்கு சொத்தை ஈடுவைத்தவருமான கப்பலகே ஜானக்க ஆனந்த, கொழும்பு பிரசித்த நொத்தரிசு எம்பீஎம் மொஹொட்டி அவர்களால் 2004.10.26 ஆந் திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட முறி இல. 2516 இல் கொடுப்பனவு தவறியுள்ளார். )*

ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ யால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் மேலே குறிப்பிடப்பட்ட சொத்தை, அதே இடத்தில், 17.02.2009 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வேன்.

***தீர்மான அறிவித்தலுக்கு.***- தயவு செய்து 2007.10.05 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2007.11.06 ஆந் திகதிய ''ஐலண்ட்'', ''திவயின'' மற்றும் ''தினகரன்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

***கொடுப்பனவு செய்யும் முறை*** .- ஏலத்தினிறுதியில் சித்திகரமான கொள்வனவாளர், பின்வரும் தொகைகளைப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

